| | |
|---|---|
| OS.No | 155/2021 (PW1) |
| நாள் | 29.07.2026 |
| பெயர் | நிஷா கேத்தரின் |

குறுக்கு விசாரணை

தாவா சொத்தை இது நாள் வரை நான் சென்று நேரடியாகப் பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்திருக்கிறேன். மொத்த கிரையத் தொகை எவ்வளவு என்று கேட்டால் 12,90 100 ஆகும். தரகர் மூலம் சொத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்தோம். அவர் பெயர் சண்முகம். இருவருக்கும் நண்பர்தான். எந்த தேதியில் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்று கேட்டால் 17.09.2020 அன்று போடப்பட்டது. அதில் சாட்சி கையொப்பம் யார் யார் போட்டிருக்கிறார்கள் என்றால் நானும், என் கணவரும் கையொப்பம் செய்திருக்கிறோம். தனிப்பட்ட நபர்கள் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லையா என்றால் இல்லை. முதலில் சட்ட அறிவிப்பு நான்தான் அனுப்பியிருக்கிறேன் என்றால் ஆமாம். சட்ட அறிவிப்பு அனுப்பிய அன்று பாக்கி கிரையத் தொகை செலுத்துவதற்கான வசதியும், வாய்ப்பும் பணமும் என் கைவசம் வைத்திருக்கிறேன் என்று காட்டக்கூடிய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியை அழைத்தோம். வரவில்லை. எங்களை அசிங்கமாக பேச ஆரம்பித்தார். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பும் நாங்கள் கிரையத் தொகை செலுத்துவதற்கு தயார் என்று எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்தபோது 45 நாட்கள் கால அவகாசம் கேட்டோம். வழக்கு தாக்கல் செய்த பிறகும் பாக்கி கிரையத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்று சொன்னால். சரியல்ல. அட்வான்ஸ்

தொகை ரூபாய் 1,00,000. கொடுக்கப்பட்டது. வழக்கு தாக்கல் செய்யும்பொழுது அட்வான்ஸ் தொகை ரூபாய் 1,00,000 என் கைவசம் இருந்தது என்றால் ஆமாம். காசோலை தொகை கொடுக்கவில்லை. பாக்கி கிரைய முன்தொகையை நாங்கள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தரகர் சண்முகம் மூலம் பேசினோம். பிரதிவாதி தனக்கு வேண்டாம் என்று அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்பந்தப்படி 45 நாட்களுக்குள் நாங்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்பது உள்ளது என்றால் ஆமாம். 45 நாட்களில் கிரையம் செய்து கொள்ளப்படவில்லை என்றால். சரிதான் அதற்குக் காரணம். என் மாமனார் தவறிவிட்டார் என் கிரைய ஒப்பந்த ஆவணப்படி முன்தொகை ரூபாய் ஒரு லட்சத்தை நானே வைத்துக் கொண்டதாலும் வழக்கு தாக்கல் செய்யும் காலகட்டத்திலும் அந்தத் தொகை என்னிடமே இருந்ததாலும் வா சா ஆ ஒன்று ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாசா ஆ 1 ஆவணத்தில் சாட்சிகள் 1 என்ற இடத்தில் யார் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்றால் அந்த இடத்தில் என் கையெழுத்தை தவிர வேறு யார் கையெழுத்தும் அதில் இல்லை.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.